**மில்கோ தனியார் கம்பனி - 2024**

-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மில்கோ தனியார் கம்பனியின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- கம்பனி தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- கம்பனியின் வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தில் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களுக்கு முரணாக கடன்கொடுத்தோர் மீதி, அட்டுறு செலவுகள், மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதி என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 38,373,551 ஆன வரவு மீதியை அடையாளங்கண்டு தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படாது செலவு மீதிகளுக்கு எதிரீடு செய்யப்பட்டதன் காரணமாக வணிக மற்றும் ஏனைய மீதிகள் அத்தொகையாலும் வணிக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் இருந்த மொத்தமாக ரூபா 33,054,462 ஆன செலவு மீதிகளை அடையாங்கண்டு தேவையான செம்மையாக்கல்களை | இந்த மீதிகள் கணக்கீட்டு தவறுகளின் அடிப்படையில் மற்றும் நீண்டகாலமாக கணக்குகளுக்குள் பேணப்பட்டுவரும் மீதிகளாகும். கணக்கீட்டு தகறுகளை சரிசெய்வதற்கும் நீண்டகாலமாக காணப்படபடுகின்ற மீதிகளை தேவையான அங்கீகாரத்தின் பின்னர் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய தவறுகளை அடையாங்கண்டு சரிசெய்யவேண்டியதுடன் பொறுப்புக்கள், மற்றும் சொத்துக்கள் மீதிகள் நியமத்தில் இடமளிக்கப்படுமாயிருந் தாலே தவிர எதிரீடு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளாது வரவு மீதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டதன் காரணமாக வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் அத்தொகையாலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 31 மற்றும் 34 ஆம் பந்திகளின் பிரகாரம் சொத்துக்களை மெய்மையாய்வு செய்ததன் பின்னர் மீண்டும் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் சொத்துக்கள் மீள்மதிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2008 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பின் பின்னர் மீளாய்வாண்டு வரை சொத்துக்கள் மீள் மதிப்பு செய்யப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக சொத்துக்களின் உரிய காலத்திற்குரிய பெறுமதி கணக்கேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் நிதி ஆண்டின் போது சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் 5.5.15 ஆம் பந்தியின் பிரகாரம் வணிகக் கடன்பட்டோர் மீதியான ரூபா 1,083,193,368 இற்காக பிற்காலத்து அறவிட முடியா கடன் நட்டத்தை அடையாங்காணல்களை அளவீடு செய்வதற்காக எதிர்பார்த்த கடன் நட்ட முறைமை (Expected Credit Loss Method) பயன்படுத்தப்ப வேண்டிய போதிலும் அவ்வாறு கணிப்பீடு செய்யப்படாது ரூபா 55,790,443 அறவிட முடியாக் கடனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் செயற்பாடற்ற கடன்பட்டோர்கள், காலப்பகுப்பாய்விற்கு இணங்க ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் மூடப்பட்டுள்ள நிறுவனத்தின் கடன்பட்டோர் பெறுமதியில் மொத்தமாக ரூபா 179,092,663 இற்காக அறவிட முடியாக் கடனுக்காக செம்மையாக்கல்கள் | கடன்பட்டோர் மீதிகளை பகுப்பாய்வு செய்தல் முடிவடைந்ததன் பின்னர் ஒப்பீடு செய்து இறுதியாக அறவிடக்கூடிய பெறுமதிகளை அறவீடு செய்வதற்கும் அறவீடு செய்ய முடியாத பெறுமதிகளை கணக்குகளிலிருந்து நீக்குவதற்காக தேவையான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அறவிடமுடியாக் கடனுக்கான செம்மையாக்கல்களில் சரியான தன்மை மற்றும் தாக்கத்தை உறுதியாக மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. மேலும் அக்கடனை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பல சந்தர்ப்பங்களில் கிடைத்த மொத்தமாக ரூபா 11,886,564 ஆன மானியங்களை பிற்போட்ட வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய தரப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதனை சரிசெய்யும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் செம்மையாக்கப்படாது ஆண்டின் போது பெற்ற மானியமாக கணக்கீடு செய்யப்பட்டு உரிய முழுத்தொகையும் வருமானக் கூற்றில் காலக்கழிவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுனுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வங்கியில் பேணப்பட்டு வருகின்ற ஐக்கிய குடியரசு டொலர் நிலையான வைப்புக்களின் தொடக்க அரையாண்டு தொடர்பான வட்டி வருமானம் மற்றும் நிலையான வைப்புக்கள் காலாவதியாகும் போது பெற்ற வட்டி வருமானமாக முறையே ஐ.கு டொலர் 238,250.30 மற்றும் ஐ.கு டொலர் 466,308.08 என்பவற்றை ரூபா பெறுமதிக்கு பரிமாற்றம் செய்யும் போது | டொலர் நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைந்த திகதியான 2024 யூலை 06 ஆந் திகதியில் உள்ளவாறான உரிய வட்டி வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது நாணயமாற்று விகிதமாக டொலர் பெறுமதிக்குப் பதிலாக தவறுதலாக யூரோ விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நாணயத்தை பரிமாற்றம் செய்யும் போது சரியான நாணயமாற்று விகிதம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றமான நாணயமாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் நிதி வருமானம் ரூபா 6,393,467 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்ததுடன் வைப்பு நாணயமாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நட்டம் ரூபா 10,753,064 ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஒட்டுமொத்த நட்டம் ரூபா 4,359,597 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல் ரூபா 92,425,626 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளில் அது ரூபா 80,539,062 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 11,886,564 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இந்த வித்தியாசத்திற்கான காரணமானது 2024 ஆம் ஆண்டில் அரசாங்க மானியமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 11,886,564 மீதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் கிரயத்தில் செம்மையாக்கப்பட்டிருந்த தனாலாகும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | குறிப்பு இலக்கம் 1.3.8 இற்கு இணங்க இருப்புக்கள் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்பட வேண்டிய பெறுமதியில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 03 வகையான இருப்புக்களுக்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 12,096,362 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தும் அது தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இறுதி இருப்பில் | 2003-2006 காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விபரம் இல்லாத இருப்புக்கள் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. டியூனிப் லங்கா நிறுவனத்திடமிருந்து பொதி செய்தல் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டின் போது உரிய கம்பனி மூடப்பட்டதன் காரணமதாக அச்சந்தர்ப்பத்திலிருந்து கணக்குகளில் காணப்பட்ட இருப்பு மீதிகள் பேணப்பட்டு வந்திருந்தும் பௌதீகரீதியாக | இருப்புக்கள் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பீடு செய்வதற்கும் சேதமடைந்த இருப்புகளின் நட்டத்தை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இருப்புக்களின் மொத்தம் ரூபா 52,394,512 இற்காக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் தனியார் நிறுவனத்தில் காணப்படுகின்ற ரூபா 42,255,235 ஆன இருப்புக்கள் மற்றும் மொத்தம் ரூபா 30,062,931 ஆன பௌதீகரீதியாக காணப்படாத இருப்புக்களுக்காக ஒதுக்கீடுகள அல்லது சேதங்களுக்கான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிமையாண்மை நிறுவனத்திடம் காணப்பட்டு சுயமாக நிருவகிக்கப்படுகின்ற பாற் பண்ணையாளர் சங்கங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 9,871,432 பால் குளிரூட்டி இருப்பினை பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இருப்புக்களின் உள்ளமை, முழுமைத்தன்மை, பெறுமதி, உரிமை என்பவற்றை திருப்திகரமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | காணப்படாததனால் நிதிக்கூற்றுக்களின் மீதிக்காக அடுத்துவரும் நிதி ஆண்டின் போது ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சுயமாக நிருவகிக்கப்படுகின்ற பாற் பண்ணை சங்கங்களின் பாலினை குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திருக்கும் குறிக்கோளில் பால் குளிரூட்டி இயந்திரம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த இயந்திரங்களில் சில இயந்திரங்கள் செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 செலவு விடயங்கள் மற்றும் 02 நடைமுறைச் சொத்து விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளுக்கும் அதனுடன் தொடர்புபட்ட பட்டோலைகள்/ வவுச்சர்கள் மற்றும் அனுப்புதல் பத்திரங்களுக்குமான பத்திரங்களின் பிரகாரமான மீதிகளுக்குமிடையே ரூபா 76,530,680 வித்தியாசம் | தலைமை அலுவலகத்தின் வாடகை செலவுகள் கட்டிட முற்பணங்களாக பதியப்பட்டதன் காரணமாக ரூபா 598,543 வித்தியாசமும் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் ரூபா 160,000 வாடகை செலவும் கட்டிட வாடகை செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கணக்கீட்டுத் தவறின் காரணமாக வழிச்சரக்குகளின் | கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் போது மூல ஆவணங்களின் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கும் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. | பெறுமதியில் வித்தியாசம் உருவாகியுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>பொல்கஹவெல தொழிற்சாலையின் கடன்பட்டோர் மீதி பகுப்பாய்வின் போது 2017 ஆம் ஆண்டின் பின்னரான கடன்பட்டோர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக வித்தியாசம் உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் செயற்பாடற்ற கடன்பட்டோர் மீதிகளையும் உள்ளடக்கி மீதிகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும். | |
| (உ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்குச செலுத்திய ரூபா 4,699,557 முற்பணம் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நீண்டகாலமாக கிடைக்க வேண்டிக் காணப்பட்ட மொத்தமாக ரூபா 295,497,016 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மொத்தம் ரூபா 16,515,810 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மொத்தமாக ரூபா 36,751,412 ஆன செலுத்த வேண்டிய மீதிகளின் 03 விடயங்களை நீண்டகாலமாக தீர்த்துவைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதி அமைச்சின் மூலம் வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்ட நிவாரணப் பெறுமதியில் இன்னும் கிடைக்க வேண்டிய ரூபா 287,981,206 பெறுமதியும் பாடசாலை மாணவர்களுக்கு திரவப் பால் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியும் இவ்வாறு கணக்குகளில் காணப்பட்டது.<br><br>செலுத்த வேண்டிய மீதிகளில் பலவற்றினை செலுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமை, மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நிதிப் பிரிவிடம் போதியளவு தகவல்கள் காணப்படாமை தாக்கமளித்துள்ளது. | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நீண்டகாலமாக கிடைக்க வேண்டிக் காணப்பட்ட மீதிகளுக்காக ஒதுக்கீடு செய்தல் மற்றும் அவற்றினை தீர்த்து வைப்பதற்கு அந்த நிறுவனங்களுடன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஊ) | படல்கம பால் செயன்முறைப்படுத்தும் நிலையத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக | எதிர்வரும் காலங்களில் இந்த மீதியை தொடர்ந்தும் கணக்குகளில் பேணும் | கடன் பணத்தை கணக்கீடு செய்வது தொடர்பாக உரிய அரசாங்க |

| | | |
|---|---|---|
| திறைசேரியினால் ஒரு வெளிநாட்டு வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பணத்தில் செயற்திட்டத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 12,641,310,517 கம்பனியால் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடனாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் திறைசேரியுடன் கடன் உடன் படிக்கையினை மேற்கொண்டிருக்காமையின் காரணமாக அப்பொறுப்புக்களின் தாக்கத்தினை அடையாளம் கண்டுகொள்ள முடியாதிருந்தது. | தேவைப்பாடு தொடர்பாக கவனித்துப்பார்த்ததன் பின்னர் இந்த மீதியை அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் தேவையான அங்கீகாரத்திற்கு உட்பட்டு அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்துடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | | தொகை (ரூபா) | வழங்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத:துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | வணிக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் | 101,113,661 | கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துதல் | மீதிகளின் உறுதிப்படுத்தலினை நேரடியாக கணக்காய்வு பிரிவிற்குச் சமர்ப்பிக்குமாறு கம்பனிக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்காததனால் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புபட்ட ஏனைய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வணிக மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் | 500,840 | ஆரம்ப கடன் கொடுத்தோர் மீதிப் பட்டியல் | தீர்த்துவைப்பதற்கு அல்லது தேவையான அங்கீகாரத்தின் பின்னர் நிதிக்கூற்றுகளிலிருந்து நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கடன்கொடுத்தோர் மீதிப் பட்டியலினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் வரவு மற்றும் செலவு மீதிகள் | 79,737,898 (வரவு)<br>4,500,000 (செலவு) | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | உரிய மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுப் பிரிவிற்கு நேரடியாக கிடைக்கும் வகையில் வேண்டுதல் விடுக்கப்பட்டு உரிய கடன்பட்டோர்களிடம் எழுத்துமூலம் | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் இல்லாததனால் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்குரிய ஏனைய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வேண்டுதல் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வைப்பு மீதிகள் | 3,086,185 | 94 வைப்பு மீதிகளின் மீதிகளை சரியாக உறுதிப்படுத்தவதற்கு தேவையான ஆவணங்கள் | சில மீதிகளுக்கு நிதிப் பிரிவிடம் உறுதிப்படுத்தல் ஆவணங்கள் காணப்பட்டிருந்தும் சில மீதிகளுக்கு உறுதிப்படுத்தல் ஆவணங்கள் காணப்படவில்லை. | வைப்புக்களுக்குரிய மூல ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நீண்டகாலக் கடன் | 2,108,063 | கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் | உரிய மீதிகள் தொடர்பாக தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களின் போது கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வணிக பெறவேண்டியவைகள் ரூபா 567,358,744 இனால் அதிகரித்திருந்ததுடன் அவற்றில் ரூபா 412,134,222 அதாவது 73 சதவீதம் கொழும்பு தொழிற்சாலைக்கு உரியதாக இருந்தது. இந்த பெறவேண்டிய மீதிகளில் அதிக அளவானவை வங்கி பிணை இன்றி கடனுக்கு விற்பனை செய்த நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் விற்பனைகளின் அளவு அதிகரித்ததன் அடிப்படையில் இக்கடன்பட்டோர் மீதி உருவாகியிருந்தது. | கடனை அறவீடு செய்யும் பாதுகாப்பினை உருவாக்கி கொள்வதற்காக கம்பனியின் கொள்கையின் அடிப்படையில் வங்கி பிணைகளுடன் கடனுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | உரிய கடன்கொடுத்தோர் கம்பனியிடமிருந்து 2024 | உரிய கடன்கொடுத்தோர் |

| | | | |
|---|---|---|---|
| | தலைமை அலுவலகத்தின் ரூபா 7,473,222 வணிக கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதி ரூபா 10,384,843 ஆக இருந்ததனால் ரூபா 2,911,621 வித்தியாசத்தினை அடையாளங்கண்டு செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டின் போது 03 இன்வொயிஸ்களின் மொத்தப் பெறுமதி ரூபா 2,649,709 இனை மில்கோ கம்பனி 2025 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்தல் இன்வொயிஸ் பெறுமதியினை மாற்றம் செய்தல் என்பன 2018-2020 ஆம் ஆண்டுகளில் ஆரம்ப மீதியில் வித்தியாசம் காணப்படுவதற்கு இவை காரணமாக இருந்தது. | மீதியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை வரி செலுத்த தவறியதன் காரணமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2024 சனவரி 09 ஆந் திகதி மொத்தமாக ரூபா 7,561,888 வரியினை செலுத்த தவறுதல் மற்றும் தண்டப் பணம் விதித்திருந்ததுடன் அவற்றில் ரூபா 5,749,709 மீளாய்வாண்டின் போது செலுத்தபட்டிருந்தது. அதற்கிணங்க இன்னும் ரூபா 1,812,179 செலுத்த வேண்டிக் காணப்பட்டது. | செலுத்தப்படாதுள்ள NSL மற்றும் SNC ஆகிய வரிகள் மற்றும் அனைத்து வரிகளுக்குமாக விதிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்தை நீக்குவதற்காக வருமானவரி மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஆலோசனை வழங்கியுள்ள முறைமையில் சத்தியப்பிரமாண கடிதத்துடன் வேண்டுதல் கடிதத்தினை சமர்ப்பிப்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2022 இன் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிர்ணயிக்கப்பட்ட காலாண்டின் பின்னர் வருகின்ற மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் வரி அறிக்கையினை பூரணப்படுத்தி உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்திற்கு | சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அறிக்கையை சமர்ப்பிக்கும் போது இடம்பெற்ற | வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரி அறிக்கைக ளைச் சமர்ப்பிப்பத ற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டு தொடர்பாக அந்த அறிக்கை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் 04 காலாண்டுகள் தொடர்பான சமூக பாதுகாப்பு வரி அறிக்கை முறையே 37 நாட்கள் 164 நாட்கள், 31 நாட்கள், 10 நாட்கள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சிக்கல்களின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிக்கட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாமையின் மூலமான தண்டப் பணத்தை தவிர்த்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டுக் கையேடு மற்றும் வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 257 நாட்கள் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தாமதித்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் தாமதமடைந்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,934,508 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 469,384,394 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 405,449,886 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு விற்பனை அதிகரித்தல், விற்பனை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பகிர்ந்தளித்தல் செலவுகள், நிருவாக செலவுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்காமை நிதிச் செலவுகள் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைதல் என்பன பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

கம்பனியின் விற்பனை வருமானங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 06 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் விற்பனை கிரயம் 04 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஏனைய வருமானங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் நிருவாகச் செலவுகள் பகிர்ந்தளித்தல் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளின் மொத்தம் 01 சதவீதத்தினால் அதிகரித்தல் மற்றும் நிதிச் செலவுகள் 11 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

(அ) மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 12 சதவீதமாக இருந்ததுடன் தேறிய இலாப விகிதம் 0.4 சதவிதமாக இருந்தது. அவ்வாறே ஒரு பங்கின் உழைப்பு மீளாய்வாண்டின் போது மறை 0.08 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது மறை 0.55 ஆகும். அதற்கிணங்க மீளாய்வாண்டில் பங்கு மூலதனத்திற்கு உழைப்புக்கள் இடம்பெறவில்லை. மேலும் நிறுவனத்தில் காணப்பட்ட செயற்பாட்டு செயற்திறனின்மைகள் மற்றும் பலவீனமான செயலாற்றல் கம்பனியின் ஒட்டுமொத்த விளைவுகள் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் சமப்படுத்தல் விகிதம் 0.74 ஆகும். அதாவது முழுச் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் முழுக்கடனின் அளவு 74 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இந்த விகிதம் 72 சதவீதமாகும். மீளாய்வாண்டில் கம்பனியின் முழு மூலதனத்திற்கான கடன் விகிதம் 2.8 ஆகும். அதற்கிணங்க கம்பனியின் கடன் மூலதனம் உயர்ந்த பெறுமதியில் காணப்படுகின்றது எனவும் சொத்துக்களின் நிதியளிப்பு கடன் மூலதனத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காலி லபுதுவ பாலை குளிரூட்டுதல் நிலையத்தின் முகாமைத்துவ செயலாளரினால் 2024 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2025 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு சங்கத்திடமிருந்து 22,216 லீற்றர் பால் நிலையத்திற்கு கிடைத்துள்ளது என பிழையாக பதிவு செய்து ரூபா 4,296,509 மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது என உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக தொடக்க புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2026 யூன் 30 ஆந் திகதி வரை அந்த நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. மேலும் இந்த சம்பவம் தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறைப்பாட்டின் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த மோசடி சம்பந்தமாக அக்மீமன பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மோசடியை மேற்கொண்ட சபை செயலாளரினை உரிய பதவியிலிருந்தும் ஒருங்கிணைந்த நிருவாக சபையிலிருந்தும் நீக்குவதற்கு லபுதுவ பாலை குளிரூட்டும் நிலையத்தின் நிருவாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகையாக செலுத்துதல் தொடர்பான புலனாய்வின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களை அடையாளங்கண்டு சட்டத்தை அமுல்ப்படுத்தி உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் மாதாந்தம் 400 கிராம் பால்மா 05 பக்கட்டுக்கள் | ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களில் பால்மாவினை இலவசமாக | உற்பத்திக் கிரயத்தினை ஈடுசெய்கின்ற ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | வீதம் இலவசமாக வழங்கப்படுவதுடன் ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது வழங்கப்படுகின்ற 04 பால் மா பக்கட்டுக்கள் உள்ளடங்கலாக ஒரு ஊழியருக்கு 64 பால்மா பக்கட்டுக்கள் இலவசமாக வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க இலவசமாக பால்மாவினை வழங்குதல் மற்றும் ஊழியர் பரிசுப் பொதிகளை (hampers) வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது கம்பனி ரூபா 79,767,632 செலவு செய்திருந்தது. மேலும் கம்பனி தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்தும் அது தொடர்பாக மீளாய்வு செய்யாது அந்த வகையிலே பால்மா இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. | வழங்குவதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க அது மில்கோ கம்பனியின் முன்னேற்றத்திற்காக செயற்பட்டு வருகின்ற பதவியணியினருக்காக மில்கோ கம்பனி மேற்கொள்கின்ற ஊழியர் நலன்புரியாகும். | விலையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையாகக் காட்டப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 825,645,292 ஆன கெடம்பே விற்பனை நிலையத்தினை நிர்மாணித்தல், திகன பால் தொழிற்சாலையின் ஐஸ்கிறீம் கப் மற்றும் கோன் நிரப்பும் இயந்திரத்தினை ஸ்தாபித்தல், தொழிற்சாலையை புதுப்பித்தல் இன்வொயிசினை பூர்த்திசெய்யும் முறைமையினை தயாரித்தல் என்பன ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலம் கடந்திருந்தும் கணக்காய்வு திகதியான 2026 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை அவற்றின் செயற்பாடுகளைப் பூர்த்திசெய்து எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ரூபா 15 மில்லியனுக்கு மேற்பட்ட ஐஸ்கிறீம கோன் நிரப்பும் இயந்திரத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்துவதற்கு தேவையான உதிரிப் பாகங்கள் மற்றும் துணைக்கருவிகள் என்பவற்றை உரிய இயந்திரத்தினை கொள்வனவு செய்த காலத்திலேயே கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது என்பதனால் உரிய இயந்திரத்தினை ஐஸ் கிறீம் நிரப்புவதற்காக மாற்றியமைக்கும் இயலுமை தொடர்பாக கம்பனியால் தற்பொழுது ஆராய்ந்து பார்க்கப்பட்டு வருகின்றது. மேலும் ரூபா 809 மில்லியனுக்கு மேற்பட்ட திகன தொழிற்சாலையினை | நிர்மாண வேலைகள் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நவீனமயப்படுத்துவதற்குரிய நிதிச் செலவுகளை மூலதனமாக்குவதற்காக அதனுடன் தொடர்புபட்ட சொத்துக்களின் பெறுமதியை அடையாளம் காண்பதற்காக கம்பனியால் தற்பொழுது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் மூலம் வழங்கப்படுகின்ற அறிக்கையின் அடிப்படையில் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் 03 வகையான உற்பத்தி உதிரிப் பொருட்களை உற்பத்தி கிரயத்தினை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்ததன் காரணமாக ரூபா 35,927,758 நட்டம் ஏற்பட்டிருந்தது. | உரிய சீஸ் உற்பத்தியின் தீர்மானிக்கும் போது ஏனைய போட்டி உற்பத்திப் பொருட்களின் விலையை கவனித்துப் பார்க்க வேண்டி ஏற்பட்டதனைப் போல உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் போது உரிய சந்தை இடைத்தரகர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இலாப எல்லை (PROFIT MARGIN) உச்ச அளவில் வழங்க வேண்டி ஏற்படுவதும் உரிய உற்பத்திப் பொருட்களுக்காக குறைந்த வேண்டுதல் காணப்படுவதும் காரணமாக குறைந்த அளவில் உற்பத்தி செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க மேற்கூறிய காரணிகளின் தாக்கத்தின் அடிப்படையில் இவ்வாறான நிலைமை உருவாகியுள்ளது. உரிய படர் உற்பத்தியானது நலன்புரி அடிப்படையில் கம்பனியின் | கிரயம் மற்றும் இலாப எல்லையுடனான விலைக்கு விற்பனை செய்வதன் நிறுவனத்தின் நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊழியர்களுக்கு மாத்திரம் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் வழங்கப்படுகின்ற ஒரு பொருளானதுடன் எதிர்காலத்தில் உரிய உற்பத்திப் பொருளின் விலையில் மாற்றம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2024 ஆம் ஆண்டில் 80 மில்லி லீற்றர் யோகட் மற்றும் 180 மில்லி மீற்றர் UHT பால் (Ultra High Temperature Milk) ஆகிய உற்பத்திப் பொருட்களின் எதிர்பார்த்த விற்பனைகள் முறையே 120,018,000 மற்றும் 23,100,000 அலகுகளாக இருந்த போதிலும் உள்ளபடியான விற்பனை அளவு முறையே 81,649,414 மற்றும் 19,414,484 அலகுகளாக இருந்ததனால் எதிர்பார்த்த விற்பனையை அடைந்துகொள்ளல் முறையே 68 சதவீதம் மற்றும் 84 சதவீதமாக இருந்தது. | பொலன்னறுவை தொழிற்சாலையின் UHT உற்பத்தி இயந்திரத்தில் அவசர பழுதுகளின் காரணமாக சில மாதங்கள் வரை உரிய UHT 450 ml மற்றும் 900 ml இன் உற்பத்தியினை திகன தொழிற்சாலையில் மேற்கொள்வதன் காரணமாக திகன தொழிற்சாலையின் UHT 180 ml பொருள் மட்டுப்பாடாக இருத்தலாகும். மேலும் திகன தொழிற்சாலையில் செயற்படாது காணப்படுகின்ற கல்கிரி உற்பத்தி இயந்திரம் 2024 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்டு அப்போது வரை அதிக வேண்டுதல் காணப்பட்ட கல்கிரி இயந்திரம் ஆரம்பிக்கப்பட்டதனால் UHT இயந்திரம் மற்றும் கல்கிரி உற்பத்தி நடவடிக்கைகள் என்பவற்றை ஒரே தடவையில் உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்ததன் அடிப்படையில் UHT உற்பத்தி குறைவடைந்தது. அவ்வாறே பாதீடு செய்யப்பட்ட யோகட்டின் அளவினை விட விற்பனை அலகுகள் குறைவடைவதற்கு படல்கம தொழிற்சாலையின் செயற்பாடுகளை | எதிர்பார்த்த விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்பாட்டு பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்பிக்காமை தாக்கமளித்துள்ளது. எவ்வாறாயினும் ஏனைய தொழிற்சாலைகளின் யோகட். உற்பத்தி இயந்திரங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தும் பாதீடு செய்யப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | |
| (இ) | பால் சேகரிக்கும் நிலையங்களின் மூலம் கொள்வனவு செய்த பசும் பாலை தொழிற்சாலைகளுக்கு ஒப்படைக்கும் போது கொள்வனவு செய்த பசும்பாலில் அடங்கியுள்ள FAT மற்றும் SNF இன் அளவினை விட குறைந்த FAT மற்றும் SNF அளவு அடங்கியிருந்ததன் காரணமாக 2024 ஆம் ஆண்டின் போது பால் பண்ணையாளர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது தொழிற்சாலையினால் பொறுப்பேற்ற நியமத்தினை விட குறைந்த நியம தரத்திற்காக ரூபா 46,463,371 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த வித்தியாசத்திற்கான காரணமாக இருந்ததானது சில சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்த பாலை குளிரூட்டும் நிலையத்தின் மூலம் தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகின்ற பால் இருப்புக்களின் லீற்றர் அளவு மற்றும் அதன் தரம் (FAT/ SNF) உரிய தொழிற்சாலைகளிலிருந்து பொறுப்பேற்கும் போது முரண்படுவதற்கு உள்ளாகுவதனால் உருவாகின்ற நட்ட நிலைமையாகும். | பசும்பாலில் அடங்கியுள்ள FAT மற்றும் SNF குறைவடைந்ததற்கான காரணத்தை அடையாளங்கண்டு நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உற்பத்திக்குப் பொருத்தமற்றதன் காரணமாக அம்பேவெல தொழிற்சாலையில் சேதமடைந்த 54,128 லீற்றர் பாலின் செலவான ரூபா 9,622,834 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய செலவுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அச்செலவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 249 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தது. | இந்த நீக்குதல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை உள்ளக பரீட்சிப்புக்களின் மூலம் அடையாளம் கண்டு அத்தரப்பினர்களிடமிருந்து உரிய பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உற்பத்திக்கு பொருத்தமற்ற பாலைப் பெற்றுக்கொள்வதற்கான வரையறைகளை இன்னும் அபிவிருத்தி செய்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திகன மற்றும் பொலன்னறுவை பால் தொழிற்சாலைகளின் மூலம் தொடர்ச்சியாக நட்டம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டுகளின் நட்டங்களின் மொத்தம் முறையே ரூபா 908,377,135 மற்றும் ரூபா 226,973,992 ஆக இருந்தது. | 2024 ஆம் ஆண்டில் பசுப் பாலினை சேகரித்தல் அதிகரித்திருந்தும் திகன மற்றும் பொலன்னறுவை தொழிற்சாலைகளை சிறந்த இயலளவில் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தமை இதற்கு தாக்கமளித்திருந்தது. | நட்டமடையும் தொழிற்சாலைகளின் இயலளவு பயன்பாட்டினை அதிகரித்து இலாபம் அடையும் நிலைக்கு மாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொழும்பு பால் தொழிற்சாலையில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 23,092,669 ஆகக் காணப்பட்ட நட்டம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 150,413,535 இலாபமாக முன்னேற்றமடைந்திருந்தும் 2024 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையிலான விற்பனை அதிகரித்திருந்தமை அதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | | |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டில் 20,705,024 லீற்றர்களான திரவப் பால் உற்பத்தி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2024 ஆம் ஆண்டளவில் 11,039,432 லீற்றர் வரை 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் உரிய காலப்பகுதிக்குள் யோகட் ஐஸ்கிரீம் படர் பால்மாவு, கிருமி நீக்கம் செய்யப்பட்ட தகரத்தில் அடைத்த பால் ஆகிய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி அளவு 42 சதவீதத்திற்கும் 09 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் பால்மாவு, படர் Sterilized பால், தகரத்தில் அடைத்த பால் ஆகிய உற்பத்திப் பொருட்களை மாத்திரம் உற்பத்தி செய்தல் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 98 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் அதிகரித்திருந்தது. | பால் மற்றும் செயன்முறைப்படுத்தப்பட்ட பால் உற்பத்திக்காக காணப்பட்ட பெறுமதி சேர் வரியினை விடுவித்தல் நீக்கப்பட்டு வரி விகிதமானது 18 சதவீதம் வரை அதிகரித்ததன் காரணமாக 2024 சனவரி மாதத்தின் போது விலைகளை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டதன் காரணமாக பாவனையாளர்களின் கொள்வனவு செய்யும் இயலுமை குறைவடைந்து வேண்டுதல் வீழ்ச்சியடைந்து உற்பத்திக் கிரயமும் அதிகரித்தது அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டின் போது பசும் பாலினை சேகரித்தல் அதிகரித்திருந்தும் பாவனையாளர்களின் வேண்டுதல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக யோகட் மற்றும் UHT பால் உள்ளடங்கலாக பாதுகாக்கும் காலம் குறைந்த ஏனைய உற்பத்தி பொருட்களை மட்டுப்படுத்த வேண்டியிருந்தது. | சந்தை நிலைமைகளுக்கு இணங்க பாவனையாளர்கள் கொள்வனவு செய்யும் இயலுமையினை கவனத்தில் கொண்டு சந்தைக்கு உற்பத்திப் பொருட்களை வழங்குதல் வேண்டும். |
| (எ) | பதப்படுத்தப்பட்ட பால், Sterilized பால், UHT பால், படர், ஐஸ்கிரீம் பசு நெய், பால் மாவு ஆகிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக தொழிற்சாலையிடம் காணப்பட்ட | 2024 ஆம் ஆண்டின் போது பசும் பாலினை சேகரித்தல் குறித்த அளவில் அதிகரித்திருந்த போதிலும் உற்பத்தி இயலளவினை சிறப்பாக | கம்பனியின் உற்பத்தி இயலளவினை சிறப்பாக பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் திரவப் பாலினை சேகரிப்பதனை |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி இயலளவில் 50 சதவீதத்திற்கு குறைந்த இயலளவு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் யோகட் கொழுப்பு நீக்கப்பட்ட பால், தகரத்தில் அடைத்த பால், ஆகிய உற்பத்திகளை மேற்கொள்வதற்காக தொழிற்சாலையிடம் காணப்பட்ட உற்பத்தியின் இயலளவில் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவானவை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. சீஸ் உற்பத்தி நடவடிக்கைகள் திகன தொழிற்சாலையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அது 88 சதவீத இயலளவினை அடைந்திருந்தும் உச்ச இயலளவு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அல்லது உச்ச மட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு அது போதியதாக இல்லை. அதற்கிணங்க காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பால் அளவினை சந்தை வேண்டுதல்களுக்கு இணங்க ஒவ்வொரு உற்பத்தி வகைக்குமிடையே பகிர்ந்தளித:து உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகரித்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் திரவப் பாலின் விற்பனை அளவு 13,258,335 லீற்றர்களிலிருந்து 10,779,407 லீற்றர் வரை 19 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மேலும் பதப்படுத்தப்பட்ட பால் UHT பால், யோகட், ஐஸ்கிரீம் சீஸ் ஆகிய உற்பத்திப் பொருட்களின் விற்பனை அளவு 07 சதவீதத்திற்கும் 40 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் குறைவடைந்திருந்தது. | உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் விற்பனை அளவும் குறைவடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பெறுமதி சேர் வரி (VAT) விதித்ததன் காரணமாக யோகட் ஒன்றின் விலை ஒரே தடவையில் 10 ரூபாவாலும் ஐஸ் கிரீமின் விலை விலையை குறிப்பிடத்தக்க அளவாலும் அதிகரிக்க வேண்டி இருந்தது. இதன் காரணமாக யோகட் மற்றும் ஐஸ்கிரீமிற்கு இதற்கு முன்னர் காணப்பட்ட அதிக வேண்டுதல் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. | கம்பனியின் சந்தைப் பங்கினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டுகளுக்கான பிரதான | நிறுவனத்தினால் முறைப்படியான ஒரு பெறுகை அறிக்கை இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்காதது டன் முதற்தடவையாக | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க 2024 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த பெறுகை நடவடிக்கைகள் விபரமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது 2025 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தினை படிப்படியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2.(அ) பந்தியின் பிரகாரம் தொடக்க சந்தர்ப்பத்திலிருந்து முடிவடையும் வரை ஒவ்வொரு பெறுகை நடைமுறையின் நடவடிக்கைகளை முறைப்படியாக விபரிக்கின்ற ஒரு கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக அவ்வாறான கால அட்டவணை தயாரிக்கப்படவில்லை. | பெறுகை திட்டத்திற்கு இணங்க கால அட்டவணையினை எதிர்வரும் காலங்களில் தயாரிப்பதற்கான நடவடிக்கை பெறுகை செய்யப்பட்டு வருகின்றது. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |